**வேலூர் மாவட்டம்**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**ந.க..எண்.369/மாஒ6/2023, நாள். 20.03.2023**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – அனைத்து அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடத்துதல் – வழிகாட்டுதல்கள் – சார்பு.

பார்வை : 1. சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2223/C7/ஒபக/பமேகு /2022, நாள்.21.07.2022.
2. சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2223/A11/ஒபக/பமேகு /2023, நாள்.17.03.2023.

*********

வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின்படி அனைத்து பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் மாதந்தோறும் முதல் வெள்ளிக்கிழமைகளில் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி நடைபெற்று வருகிறது.

தற்போது இக்கல்வியாண்டில் பொதுத்தேர்வு சார்ந்து 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களில் தேர்வுக்கு வருகைபுரியாதவர்கள் எவரென கண்டறிவதற்கும் இத்தேர்வின் முக்கியத்துவம் மற்றும் மாணவர்களின் எதிர்காலம் குறித்து ஆலோசனைகள் வழங்குவதற்கும் அனைத்து தேர்வர்களும் தேர்வினை எதிர்கொள்வதற்கும், துணைத் தேர்வு சிறப்பு பயிற்சி மையம் ஏற்பாடு செய்வதற்கும், கண்காணிக்கவும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் **சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் 24.03.2023 (வெள்ளிக்கிழமை), 10.04.2023 (திங்கட்கிழமை) மற்றும் 24.04.2023 (திங்கட்கிழமை), ஆகிய நாட்களில் பிற்பகல் 3.00 மணி முதல் 4.30 மணி வரை** அவசியம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பார்வையில் 2–ல் காணும் சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி சிறப்பு பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தை நடத்தி அதன் அறிக்கையை இவ்வலுவலகம் சமர்பிக்குமாறு அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

20/03/23

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

இணைப்பு –
பார்வை 2–ல் காணும் செயல்முறைகள்.

பெறுநர் –
1. அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் (உரிய வழியாக).
2. அனைத்து மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.
3. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள். (மேற்பார்வையாளர்கள் (பொ) வழியாக)

நகல் – 1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. முதல்வர், இராணிப்பேட்டை – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர்.
4. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி), வேலூர்.
5. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.